கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS


மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 151 | 06-12-2025 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volume 01 | Issue: 151 | 06-12-2025 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## அமைதிப் பாதையை நோக்கி உலகை வழிநடத்துவோம்" புதின் முன்னிலையில் மோடி பேச்சு



புதுடெல்லி: டிச.6–

உக்ரைனுடன் அமைதியான தீர்வுக்கு ரஷ்யா பாடுபடுகிறது என்றும் அமைதியின் பாதையில் பயணிப்பதன் மூலமே உலகம் பயனடையும் என்றும் தெரிவித்த பிரதமர் மோடி, அமைதிப் பாதையை நோக்கி உலகை வழிநடத்துவோம் என கூறினார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று இந்தியா வந்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், நேற்று காலை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருகை தந்தார். அங்கு அவருக்கு ராணுவ அணி வகுப்பு மரியாதையுடன் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவும், பிரதமர் மோடியும் அவரை வரவேற்றனர். இதையடுத்து, மகாத்மா காந்தியின் நினைவிடமான ராஜ்காட் சென்ற விளாடிமிர் புதின், அங்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து, டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை புதின் சந்தித்தார். அப்போது இரு தலைவர்களும் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பிரதமர் மோடி, "ரஷ்ய அதிபர் புதின் தொலைநோக்குடன் செயல்படக் கூடிய தலைவர். உக்ரைன் நெருக்கடி தொடங்கியதில் இருந்து நாங்கள் தொடர்ந்து விவாதித்து வருகிறோம்.

ஒரு உண்மையான நண்பராக அவர் எல்லாவற்றையும் அவ்வப்போது எங்களுக்குத் தெரியப்படுத்தி வருகிறார். நம்பிக்கை ஒரு பெரிய பலம் என்று நான் நம்புகிறேன். இந்த விஷயத்தை (உக்ரைன் விவகாரம்) நான் உங்களுடன் பலமுறை விவாதித்துள்ளேன். அதனை உலகுக்கு முன்பாகவும் முன்வைத்துள்ளேன். அமைதியில்தான் நாடுகளின் நலன் அடங்கி இருக்கிறது. ஒன்றாக, உலகை அந்த பாதையை நோக்கி வழிநடத்துவோம்.

சமீபத்திய நாட்களில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் மூலம் உலகம் மீண்டும் அமைதியின் பாதைக்குத் திரும்பும் என்று நான் முழுமையாக நம்புகிறேன். இந்த விவகாரம் தொடர்பாக சமீப நாட்களில் நான் உலக தலைவர்களிடம் பேசும்போதெல்லாம், இந்த விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகிக்கவில்லை என்றும், இந்தியாவின் நிலைப்பாடு அமைதியின் பக்கமே உள்ளது என்றும் தெளிவாகக் கூறியுள்ளேன்.

அமைதிக்கான ஒவ்வொரு முயற்சியையும் நாங்கள் ஆதரிக்கிறோம். உக்ரைனுடன் அமைதி தீர்வை எட்ட ரஷ்யா பாடுபடுகிறது. நாம் அமைதிப் பாதையில் பயணித்தால் மட்டுமே உலகம் பயனடையும்.

பல்வேறு முன்னேற்றங்களுடன் இந்தியா ரஷ்யா உச்சிமாநாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. உங்களின் (புதின்) இந்த வருகை வரலாற்றுச் சிறப்புமிக்கது. இந்தியாவுக்கான உங்கள் முதல் பயணம் நிகழ்ந்து 25 வருடங்கள் ஆகிறது. அந்த முதல் வருகையின்போது, இரு நாடுகளின் கூட்டாண்மைக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. எங்கள் இருவருக்குமான உறவும் 25 ஆண்டுகளாக உள்ளதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்." எனத் தெரிவித்தார்.

இதையடுத்துப் பேசிய விளாடிமிர் புதின், "உக்ரைன் உடனான அமைதி முயற்சிகளில் இந்தியா கவனம் செலுத்துவதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ரஷ்யாவும் இந்தியாவும் ராணுவம், விண்வெளி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் ஆழமான உறவுகளைக் கொண்டுள்ளன. இந்த அனைத்து துறைகளிலும் முன்னேற நாங்கள் திட்டமிட்டுள்ளோம்." எனத் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீபெரும்புதூர் அருகே மின்னனு சாதனங்களுக்கான கண்ணாடி பொருட்கள் உற்பத்தி ஆலையை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்..!!




ஸ்ரீபெரும்புதூர்: டிச.6–

ஸ்ரீபெரும்புதூர் அருகே மின்னணு சாதனங்களுக்கான கண்ணாடி பொருட்கள் உற்பத்தி ஆலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited - BIG TECH) நிறுவனம், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன்கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கார்னிங் இண்டர்நேஷனல் நிறுவனம் அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட கார்னிங் இண்டர்நேஷனல் நிறுவனம் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கைபேசிகள், மடிக்கணினிகள் மற்றும் கைக்கணினிகளில் பயன்படுத்தப்படும் வலுவூட்டப்பட்ட "கார்னிங் கொரில்லா" கிளாஸ் உற்பத்தி மேற்கொள்ளும் நிறுவனம் ஆகும். ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனம், இந்தியாவில் கைபேசி உபபொருட்கள் மற்றும் மடிக்கணினி உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த நிறுவனம் ஆகும். பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (Bharat Innovative Glass Technologies Private Limited - BIGTECH)

பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனம், கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் மற்றும் ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாகும். இந்நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப் காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், நவீன தொழில்நுட்பத்துடன் முன்கவர் கண்ணாடி (Front - cover glass) உற்பத்தி ஆலை அமைத்துள்ளது. இத்திட்டத்தில் உருவாக்கப்படும் பொருட்கள், நாட்டிலேயே முதன் முறையாக Precision glass processing தொழில் நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்கும்.

இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்டு, அதே ஆண்டு ஜூன் மாதம், இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. அடிக்கல் நாட்டிவைத்த 17 மாதங்களில் இத்திட்டத்தின் உற்பத்தியை இன்று முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் நிலவும் வணிகம் புரிதலுக்கான சூழலமைப்பு சிறப்பாக உள்ளதற்கு இது சிறந்த சான்றாகும். இந்நிகழ்ச்சியின்போது, முதலமைச்சர், இந்நிறுவனத்தில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., கார்னிங் நிறுவனத்தின் துணைத் தலைவர் ஆன்ட்ரு பெக், இயக்குநர் ரவிக்குமார் கட்டாரே, வணிக இயக்குநர் ஜோய் லீ, மிசிணிகி தலைவர் பங்கஜ் மொகிந்திரா, ஆப்டிமஸ் நிறுவனத்தின் தலைவர் அசோக் குப்தா, நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருப்பரங்குன்றம் விவகாரம்: மாநிலங்களவையில் இருந்து திமுக எம்பிக்கள் வெளிநடப்பு!



புதுடெல்லி: டிச.6–

திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி மாநிலங்களவையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் முழக்கம் எழுப்பிய நிலையில், திமுக எம்பிக்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

திருப்பரங்குன்ற விவகாரம் தமிழகம் மட்டுமன்றி, நாடாளு மன்றம் வரை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என அரசியல் கட்சி தலைவர்கள் கூறிவரும் நிலையில், திருப்பரங்குன்ற மலையில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் 'தமிழகத்தில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க மதவாத சக்திகள் முயற்சி' என ஒரு தரப்பினரும், 'இந்துக்களுக்கு விரோதமாக செயல்படும் திமுக அரசு' என்று இன்னொரு தரப்பினரும் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தக்கோரி திமுக எம்.பிக்கள் சார்பில் ஒத்திவைப்பு தீர்மானம் நோட்டீஸ் அளிக்கப்பட்டது. திமுகவின் மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் ஒத்திவைப்பு தீர்மானம் நோட்டீஸ் வழங்கினார்.

இதேபோல் காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூரும் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கினார். இந்நிலையில், இரு அவைகளிலும் திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக திமுக மற்றும் கூட்டணி கட்சி எம்பிக்கள் தொடர் முழக்கம் எழுப்பினர்.

ஆனால், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் ஒத்திவைப்பு நோட்டீசை ஏற்க முடியாது என மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மறுத்ததால், திமுக உள்ளிட்ட கூட்டணிக் கட்சி எம்பி.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.

மேலும், திருப்பரங்குன்ற விவகாரம் தொடர்பாக மக்களவையில் விவாதிக்க வேண்டும் என திமுக கூட்டணி கட்சி எம்பிக்கள் கோரிக்கை வைத்த நிலையில், சபாநாயகர் ஓம் பிர்லா அதை மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமித்ஷாவை சந்தித்து ஏன்? ஓபிஎஸ் செய்தியாளர்கள் சந்திப்பு

சென்னை: டிச. 6–

அதிமுகவில் உள்ளவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று அமித் ஷாவிடம் வலியுறுத்தியதாக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு நாளையொட்டி சென்னை மெரீனாவில் உள்ள அவரது நினைவிடத்தில் முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் மரியாதை செலுத்தினார். இதன்பின்னர்



செய்தியாளர்களுடன் பேசிய ஓபிஎஸ்;

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை டெல்லியில் மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். அந்த சந்திப்பின்போது தமிழகத்தில் இன்றைக்கு இருக்கும் அரசியல் சூழ்நிலையை அவரிடம் எடுத்துக் கூறினேன். அதிமுகவை எம்ஜிஆர் எந்த நோக்கத்தில் உருவாக்கினாரோ, ஜெயலலிதா அந்த இயக்கத்தை எப்படி வெற்றிகரமாக வழிநடத்தி நிலைநிறுத்தினாரோ அந்த நிலை மீண்டும் உருவாக வேண்டும் என்பதே தொண்டர்களின் எண்ணம்.

பிரிந்தவர்கள் ஒன்றுசேர்வதற்காகவே அமித் ஷாவைச் சந்தித்தேன். அதிமுகவில் உள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தினேன். நான் எந்த சூழ்நிலையிலும் எப்போதும் தனிக் கட்சியைத் தொடங்குவேன் என்று சொல்லவில்லை. அதிமுகவை ஒன்றிணைக்க வேண்டும் என்று தொடர்ந்து கூறிவரும் ஓபிஎஸ், வருகிற டிசம்பர் 15 ஆம் தேதிக்குள் என்ன முடிவை அறிவிக்கப்போகிறார் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.

## ஜெயலலிதாவின் 9வது நினைவு நாள்: அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மரியாதை!

சென்னை: டிச.6–

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 9வது நினைவு நாள் நேற்று, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மரியாதை செலுத்தினர். "மக்களால் நான்.. மக்களுக்காக நான்" என்ற கர்ஜனை குரலுக்கு சொந்தக்காரர், ஜெயலலிதா. அவர் இந்த மண்ணைவிட்டு மறைந்து இன்றோடு 9 ஆண்டுகள் ஆனாலும், அதிமுக தொண்டர்களால் என்றென்றும் போற்றப்பட்டு வருகிறார். ஆண்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்திவந்த அரசியல் களத்தில், பெண்களாலும் சாதிக்க முடியும் என்று காலூன்றி ஜெயித்து காட்டியவர், ஜெயலலிதா. கடுமையான சவால்களுக்கு மத்தியில், அரசியலில் 9 ஆண்டுகளில் பிரமிக்கத்தக்க எழுச்சியை பெற்றார். எல்லா அரசியல் தலைவர்கள் போல ஜெயலலிதாவும் அரசியல் வாழ்வை எளிதாக கடந்துவரவில்லை. அதுவும் இவர் பெண் என்பதால், அரசியல் பாதை சற்று கடினமாகவே அமைந்தது.

திரைத்துறையில் வாழ்க்கை பயணத்தை தொடங்கிய இவர், 1982ம் ஆண்டு எம்ஜிஆர் முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார். நடிப்பின் மூலம் பிரபலமானவர் என்பதால், அப்போது அவருக்கு கொள்கை பரப்பு செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. 1987ம் ஆண்டு முதலமைச்சர் பதவியில் இருந்தபோதே எம்ஜிஆர் மறைந்தார். அவருக்கு பிறகு அதிமுக ஜானகி அணி, ஜெயலலிதா அணி என்று இரண்டாக உடைந்தது. முதலமைச்சர் பொறுப்பை எம்ஜிஆரின் மனைவி ஜானகி ஏற்றார். 1989ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அணி சேவல் சின்னத்தில் போட்டியிட்டு 27 இடங்களில் வெற்றி பெற்றது. ஜானகி தலைமையிலான அணி ஒரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. இந்நிலையில், ஜானகி அரசியல் களத்தில் இருந்து விலகினார். அதன்பிறகு, ஒன்றிணைந்த அதிமுகவின் பொதுச் செயலாளராக ஜெயலலிதா பொறுப்பேற்றார். 1991, 2001, 2011, 2016 என 4 முறை முதலமைச்சர் பொறுப்பை வகித்தார்.

முதலமைச்சராக முதல் முறை (1991) பதவி வகித்தபோது, அதிக வருமான ஆதாரங்கள் இருந்ததால், சம்பள காசோலையை ஏற்க ஜெயலலிதா மறுத்துவிட்டார். அப்போது அவர் 1 ரூபாய் மட்டுமே சம்பளமாக பெற்றார். 2016ம் ஆண்டு முதலமைச்சராக பொறுப்பேற்ற நிலையில், செப்டம்பர் 22ம் தேதி உடல்நலக் குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து, 70 நாட்கள் தீவிர சிகிச்சை பெற்று வந்த போதிலும், சிகிச்சை பலனளிக்காமல் இதே நாளில் டிசம்பர் 5ம் தேதி மண்ணைவிட்டு மறைந்தார். இந்நிலையில், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 9வது நினைவு நாள் நேற்று, சென்னை மெரினாவில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மரியாதை செலுத்தினர். அதிமுக பொதுச்செயலாளர் ஈபிஎஸ் உள்ளிட்டோர் ஜெயலலிதா நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# போலி மருந்து நிறுவனம் பற்றி பொய்களைக் கூறும் எதிர்கட்சிகளுக்கு வன்னிய முன்னேற்ற இயக்கம் கடும் கண்டனம்.

புதுச்சேரி, டிச. 6–

புதுச்சேரி தேங்காய்த்திட்டு வன்னிய முன்னேற்ற இயக்கத் தலைவர் லிங்கசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

புதுவையில் நீண்ட காலமாக மருந்து மாத்திரை முறைகேடுகள் மற்றும் அனுமதி பெறாத மருந்து கம்பெனிகள் செயல்பட்டு வருகின்றன. இது தொடர்பாக முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திலிங்கம் ஆகியோர் தற்போதைய அரசை குறை கூறி வருவதை வன்னிய முன்னேற்ற இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த முறைகேடுகள் கடந்த கால காங்கிரஸ் ஆட்சியிலேயே நடந்தவை என்றும், குறிப்பாக அந்த அதிகாரிகளை நியமித்தது முன்னாள் முதல்வர் நாராயணசாமிதான் என்றும் அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன் கூறியதை இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுள்ள என்.ஆர். காங்கிரஸ் அரசை குறை கூறிக்கொண்டு, முதலமைச்சர் ரங்கசாமியை ராஜினாமா செய்யச் சொல்வது தவறு. சுகாதாரத்துறையை பொறுப்பில் வைத்துள்ள முதல்வர் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்பது முறையல்ல என்று அவர் கூறியுள்ளார்.

சபாநாயகர் மற்றும் ஊடகங்களில் வந்த செய்தியின் படி, குறிப்பிட்ட அந்த மருந்து கம்பெனி காங்கிரஸ் ஆட்சியிலேயே தொடங்கப்பட்டது.



மேலும், இதை வைத்திலிங் கம் மற்றும் நாராயண சாமி ஆகியோரின் உறவினர்கள் நடத்துகிறார்கள் என்று வெட்ட வெளிச்சமாக தெரிவதாகக் குறிப்பிட்டுள்ளார். தேசியக் கட்சிகள் செய்த தவறுகளுக்காக, அல்லது அவர்கள் மற்றவர்களுக்கு இடங்களை வாடகைக்கு விட்டதன் மூலமாக நடந்த தவறுகளுக் காக, முதலமைச்சர் ரங்கசாமியை ராஜினாமா செய்யச் சொல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தாங்கள் செய்த தவறுகளை மற்றவர்கள் மீது பழி போடக் கூடாது. மக்களை ஏமாற்றலாம், ஆனால் இயக்கத் தலைவர்களை ஏமாற்ற முடியாது என்று கூறியுள்ள அவர், தேசியக் கட்சிகள் இரண்டு பேரும் சண்டையிட்டுக்கொண்டு மாநிலக் கட்சித் தலைவரான முதலமைச்சர் ரங்கசாமியை குறை கூறக் கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவையில் முதல் முறையாக ஒரே மேடையில் மேஜிக் மற்றும் மெண்டலிசம்,டப்பா பீட் உள்ளிட்ட ஐந்து வித நிகழ்ச்சிகள்

# அரங்கம் அதிரட்டுமே என டிசம்பர் 13 ந்தேதி உள் அரங்கில் நடைபெற உள்ள இதற்கான டிக்கெட் விற்பனை ஆன்லைன் மற்றும் ஆஃப் லைனில் துவக்கம்

கோவைடிச.06

பி.எஸ்.ஜி.கன்வென்ஷன் சென்டர் அரங்கில் பிரபல மேஜிக் கலைஞர் விக்னேஷ் பிரபுவின் மேஜிக் மற்றும் மெண்டலிஸம் ,பாடல்,டப்பாபீட் குழுவினரின் இசை நிகழ்ச்சி என ஒரே மேடையில் ஐந்து விதமான அரங்கம் அதிரட்டுமே எனும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்..




சென்னைக்கு அடுத்தபடியாக தமிழகத்தில் மிக முக்கியமான நகரமான பார்க்கப்படும் கோவையில் பொழுது போக்குவதற்கான இடங்கள் என்பது குறைவாகவே உள்ளது..

இதனால் கோவைக்கு தொடர்ந்து திரை பிரபலங்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்த படையெடுத்து வருகின்றனர்..

இந்நிலையில் இதில் மாறுபட்டு மேஜிக் மற்றும் மெண்டலிசம் எனும் பார்வையாளர்களை கவரும் அரங்கம் அதிரட்டுமே எனும் நிகழ்ச்சியை கோவையில் முதன்முறையாக (Eight D) 8 D மார்க்கெட்டிங் நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்..

டிசம்பர் 13 ந்தேதி அவினாசி சாலை நீலாம்பூர் அருகே உள்ள பி.எஸ்.ஜி.கன்வென்ஷன் உள் அரங்கில் நடைபெற உள்ள நிலையில் இதற்கான செய்தியாளர்கள் சந்திப்பு கோவை பிரஸ் கிளப் அரங்கில் நடைபெற்றது..

இதில் பேசிய, (Eight D) 8 D மார்க்கெட்டிங் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி விஷ்ணு ராஜகோபால் மற்றும் அவரது குழுவினர் செய்தியாளர்களிடம் பேசினர்..கோவை வாழ் மக்களை மகிழ்விக்க, மிகச் சிறந்த அனுபவத்தை தர, லிங்கா ஆர்கிடெக் வழங்கும் அரங்கம் அதிரட்டுமே நிகழ்ச்சி, வருகிற டிசம்பர் 13ஆம் தேதி மாலை 6 மணி முதல் நடைபெற உள்ளதாகவும்,

சாரல் பேக்ஸ் மற்றும் கார்ஸ் 327 ஆகியோர் ஒருங்கிணைப்பில் 8ஞி மார்க்கெட்டிங் ஏஜென்சி ஏற்பாடுசெய்துள்ள இந்த நிகழ்ச்சியில், மாலை 6 மணி முதல் தொடர்ந்து நான்கு மணி நேரம் நிகழ்ச்சி நடைபெறும் என தெரிவித்தனர்..

இதில் உலகின் மிக சிறந்த மாயாஜால கலைஞர் விக்னேஷ் பிரபு மேஜிக் – மெண்டலிசம் நிகழ்ச்சி, விஜய் டிவி சூப்பர் சிங்கர் இறுதி போட்டியாளர் விக்னேஷ் ராஜு, சரிகமப லிட்டில் சாம்ப் டைட்டில் வின்னர் மெல்லிசை இளவரசன் திவினேஷ் மற்றும் யோகஸ்ரீ ஆகியோரின் பாடல் நிகழ்ச்சி, இந்தியாவின் தலைசிறந்த சிறுவர்களின் டப்பா பீட் இசை நிகழ்ச்சியும் என ஒரே மேடையில் ஐந்து விதமான நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக தெரிவித்தனர்..

இதற்கான டிக்கெட் விற்பனைகள் துவங்கி உள்ளதாகவும், டிக்கெட் பிரிக்ஸ், புக் மை ஷோ மற்றும் டிக்கெட்டி ஆகிய தளங்களில் முன்பதிவு செய்துகொள்ளலாம் என தெரிவித்தனர்..

மேலும் நேரடியாகவும் டிக்கெட்டுகளை பெற கார்ஸ் 327 (CARS327) ஷோரூமை அணுகலாம் என கூறினர்..




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி இப்கோ நனோ உரங்கள் பயன்படுத்தி வந்த விவசாயி விபத்தில் மரணம் அடைந்ததை தொடர்ந்து இலவச விபத்துக் காப்பீட்டு தொகையை அவரது குடும்பத்திற்கு வழங்கினார்.

# சேலம் டிஇஓ ஆக பொறுப்பு வகித்தவருக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட கல்வி அலுவலராக பதவி உயர்வு.



சேலம் மாவட்ட கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி) பொறுப்பு வகித்த வந்த ஆர்.பாலமுருகன், பதவி உயர்வு பெற்று கள்ளக்குறிச்சி மாவட்ட கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி) ஆக செல்வதையடுத்து , அவருக்கு தமிழ்நாடு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் சங்க மாநில நிர்வாகி குருநாதன், தலைமை ஆசிரியர் ராஜேந்திரன், தமிழ்நாடு முதுகலை ஆசிரியர் சங்க மாவட்ட துணைத்தலைவர் ஜெயபால் , தெடாவூர் அரசு மேல்நிலைப்பள்ளி துணைத்தலைமையாசிரியர் பே.ரவிசங்கர் உள்ளிட்ட மாவட்ட ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.

# சேலத்தில் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு கூட்டம் !



சேலம்:பச்சப்பட்டி ஸ்ரீ செல்வ கணபதி மக்கள் சேவை அறக்கட்டளை சார்பில் டிசம்பர் 14ம் தேதி சட்ட விழிப்புணர்வு தெருமுனை கூட்டம் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் டாக்டர் வி கே பிரகாஷ் தலைமையில் நடைபெறுவதாக தகவல்.

# திருவள்ளூரில் அரசு உயர் மற்றும் மேல் நிலை பள்ளி ஆசிரியர்களுக்கு ஆற்றல் மன்றம் அதன் செயல்பாடுகள் பற்றியும் மின் சிக்கனம் மற்றும் மின் பாதுகாப்பு குறித்தும் ஒரு நாள் பயிற்சி : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் துவக்கி வைத்தார்

திருவள்ளூர் டிச 06 :

திருவள்ளூர் மாவட்டம் ஜெ.என். சாலை தனியார் திருமண மண்டபத்தில் அரசு உயர் மற்றும் மேல் நிலை பள்ளி ஆசிரியர்களுக்கு ஆற்றல் மன்றம் அதன் செயல்பாடுகள் பற்றியும் மின் சிக்கனம் மற்றும் மின் பாதுகாப்பு குறித்தும் ஒரு நாள் பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் துவக்கி வைத்து கலந்துரையாடினார்.




நமது குழந்தைகளின் எதிர்காலத்தை மட்டுமல்ல வரும் சந்ததியையும் பாதுகாக்கும் மிக முக்கியமான முயற்சி என நான் நம்புகிறேன். ஆசிரியர்கள், மாணவர்களுக்கு அறிவை மட்டுமே கற்பிப்பது மட்டுமல்ல. நல்ல பழக்கங்களையும், பொறுப்புணர்வையும் குழந்தைகளுக்குள் விதைப்பது உங்கள் கைகளில்தான் உள்ளது. மின் சக்தி மற்றும் தண்ணீர் சேமிப்பு என்பது இன்று உலகம் முழுவதும் பேசப்படும் முக்கிய காரணியாக உள்ளது. இதை நமது மாணவர்கள் புரிந்து செயல்பட வைப்பதில் ஆசிரியர்களின் பங்கு மிகப்பெரியது. இந்த ஆற்றல் மன்றங்களின் நோக்கம் அறிவை வழங்குவது மட்டும் அல்ல. அவர்களை இன்று நடைபெறும் ஒருநாள் பயிற்சி மூலம் மாணவர்களுக்குக் எடுத்துரைத்து அவர்களை செயல்படச் செய்வது என்பது மிகவும் முக்கியம்.

குறிப்பாக மின் சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவது, தேவையில்லாத போது விளக்குகள், விசிறிகள் அணைப்பது இவை அனைத்தும் மாணவர்களின் தினசரி வாழ்க்கையில் பழக்கமாக வேண்டும். அதற்காக நீங்கள் வகுப்பறை மற்றும் பள்ளியில் நடைபெறும் இறைவணக்கம் நிகழ்ச்சியில் இந்த ஆற்றல் மன்றத்தின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். மாதம் ஒரு முறையாவது மாணவர்களிடையே இந்த மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். மாணவர்களை மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும். ள்ளிகளில் இன்று நாம் விதைக்கும் இந்த மின் சிக்கன உணர்வு’ எதிர்காலத்தில் ஒரு பசுமையான, பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. நாம் அனைவரும் சேர்ந்து நமது மாணவர்களை ஆற்றல் மன்றத்தின் தூண்களாக உருவாக்குவோம் என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

பின்னர், அரசு உயர் மற்றும் மேல் நிலை பள்ளி ஆசிரியர்களுக்கு ஆற்றல் மன்றம் அதன் செயல்பாடுகள் பற்றியும் மின் சிக்கனம் மற்றும் மின் பாதுகாப்பு குறித்தும் ஒரு நாள் பயிற்சியினை துவக்கி வைத்து உறுப்பினர் அணி வில்லை (பேட்ஜ்) வெளியீட்டு, ஆற்றல் மன்ற ஒருங்கிணைப்பாளர்களுக்கு கேடயங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இதில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொ.கற்பகம் மேற்பார்வை பொறியாளர்/மின் தேவை தரப்பு மேலாண்மை பொறி. அருணா முரளிதரன் மேற்பார்வை பொறியாளர் / திருவள்ளூர் மின்பகிர்மான வட்டம் பொறி.அ.சேகர், மின் தேவை தரப்பு மேலாண்மை / செயற்பொறியாளர் (பொ) பு.இராமதாஸ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் திருமண வரவேற்பு விழாவில் மோதல்.

## இளைஞர் உயிரிழப்பு,5 பேர் கைது.

சேலம் அருகே திருமண வரவேற்பு விழாவில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் கொலை செய்யப்பட்டார்.இதுதொடர்பாக 5 பேரை போலீஸார் கைது செய்தனர்.

சேலத்தை அடுத்த காரிப்பட்டியில் திங்கள்கிழமை நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மேளம் அடித்துக் கொண்டிருந்த காரிப்பட்டியைச் சேர்ந்த சக்திவேல் மகன் ஜெயகாந்திடம் (26) கிச்சியப்பாளையத்தைச் சேர்ந்த கிட்டு என்கிற முகமது ரியாஸ், அஜய் மற்றும் அவரது நண்பர்கள் மோதலில் ஈடுபட்டனர்.

அதன்பிறகு நிகழ்ச்சி முடிந்து வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த ஜெயகாந்த்தை முகமது ரியாஸ் உள்ளிட்டோர் கல்லால் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த ஜெயகாந்த் சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் அளித்த புகாரின்பேரில் காரிப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து முகமது ரியாஸ், அஜய் மற்றும் இளம் சிறார் ஒருவரை கைது செய்தனர். இந்த நிலையில், ஜெயகாந்த் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை உயிரிழந்தார். இதையடுத்து கொலை முயற்சி வழக்கை கொலை வழக்காக போலீஸார் பதிவு செய்தனர்.

இந்த சம்பவத்தில் ஏற்கெனவே 3 பேரை கைது செய்த போலீஸார், மேலும் மணிகண்டன், அருள்பிரகாஷ் ஆகிய இருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு ஆயிரம் வால் பட்டாசில் அவரது ஓவியம் வரைந்து கோவையை சேர்ந்த ஓவியர் கவனம் ஈர்த்துள்ளார்



கோவை டிசம்பர்06

தமிழகம் மட்டுமின்றி இந்திய அளவில் ஐம்பது வருடங்களாக திரையுலகில் சூப்பர் ஸ்டாராக ஜொலித்து வருபவர் நடிகர் ரஜினிகாந்த்...

இந்நிலையில் இவரது பிறந்தநாள் வரும் டிசம்பர் 12 ந்தேதி வர உள்ள நிலையில்,கோவையை சேர்ந்த நுண் ஓவியர் யு.எம்.டி.ராஜா,ஆயிரம் வாலா பட்டாசில் சூப்பர் ஸ்டார் உருவத்தை ஓவியமாக வடிவமைத்துள்ளார்..

ஒவ்வொரு பட்டாசுகளையும் தனித்தனியாக பிரித்து எடுத்து வரிசைப்படுத்தி அடுக்கி ஓவியமாக வடிவமைத்துள்ள இதில், வெள்ளை பட்டாசு திரிகளை ரஜினிகாந்தின் தலைமுடி வெண்மை போல வடிவமைத்து முழு பட்டாசு ஓவியமாக 24 மணி நேரம் சமயம் எடுத்து தொடர்ச்சியாக வரைந்து கவனம் ஈர்த்துள்ளார்...

உலகம் முழுவதும் ரஜினிகாந்த் அவருடைய பிறந்த நாளை பட்டாசு வெடித்து கொண்டாடும் வேளையில் அவருக்கு பட்டாசிலேயே ஓவியமாக வரைந்து பிறந்தநாள் பரிசாக சிறப்பு செய்துள்ளதாக ஓவியர் ராஜா தெரிவித்துள்ளார்..

## தமிழகத்தின் முதல் கிளையான குனியமுத்தூர் மெல்பான்(Melbaan) அரேபியன் டெஸ்ஸர்ட் வகை உணவுகளை வாங்க பொதுமக்கள் ஆர்வம்!!

### வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவை தொடர்ந்து லபான் டிலைட் 10 சதவீத தள்ளுபடியில் இரண்டு நாட்களுக்கு வழங்க உள்ளதாக குனியமுத்தூர் மெல்பான் உரிமையாளர்கள் அறிவிப்பு



கோவை: டிசம்பர்06

சவூதி அரேபியா,துபாய் போன்ற வளைகுடா நாடுகளில் உள்ள பிரபலமாக உள்ள எகிப்தியன் டெஸ்ஸர்ட் வகை உணவுக்கு பெயர் போன மெல்பான் நிறுவனம் தமிழகத்தில் முதல் விற்பனை மையமாக கோவை குனியமுத்தூர் பகுதியில் கடந்த அக்டோபர் மாதம் தனது முதல் விற்பனை மையத்தை துவக்கியது..

துவங்கிய நாள் முதலே வாடிக்கையாளர்கள் குனியமுத்தூர் மெல்பான் கடையின் முன்பாக குவிய துவங்கினர்..

குழந்தைகள் முதல் பெரியவர்கள் அனைவருக்கும் பிடித்த சுவையுடன் வழங்கப்படும் மெல்பான் டெஸ்ஸர்ட் வாங்குவதற்கு வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற குனியமுத்தூரில் உள்ள தமிழகத்தின் முதல் மெல்பான் டெஸ்ஸர்ட் மையத்தில் ஐம்பதாவது தின விழா வெகு விமரிசையாக நடைபெற்றது..

துவக்க விழாவை முன்னிட்டு மெல்பான் டெஸ்ஸர்ட் லபான் டிலைட் வகைக்கு பத்து சதவீத சிறப்பு தள்ளுபடி அறிவிக்கப்பட்டது..

டிசம்பர் 3 மற்றும் 4 தேதிகளில் இரண்டு நாட்கள் இந்த தள்ளுபடி விற்பனையை வழங்க உள்ளதாக குனியமுத்தூர் மெல்பான் மைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்ஞ்

இந்நிலையில் இதற்கான விழாவில் பிரபல தொழிலதிபர் முகம்மது ஹாரிஸ் கலந்து கொண்டு சிறப்பு விற்பனையை துவக்கி வைத்தார்..

இது குறித்து குனியமுத்தூர் மெல்பான் விற்பனை மைய நிர்வாகிகள் கூறுகையில்,கேரளாவில் மெல்பான் பிரபலமாகியதை தொடர்ந்து தமிழகத்தில் முதன்மை மையமாக கோவை குனியமுத்தூரில் இந்த மெல்பான் மையம் துவங்கப்பட்டதாகவும்,மெல்பான் டெஸ்ஸர்ட் உணவை கோவை மக்கள் மிகவும் விரும்பி வாங்கி செல்வதாக தெரிவித்தனர்..

மேலும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப லபான் டிலைட் வகைக்கு மட்டும் இரண்டு நாட்கள் பத்து சதவீத தள்ளுபடி வழங்குவதாக தெரிவித்தனர்..

றிப்பாக திருமணம்,பிறந்த நாள் விழாக்கள் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கு 95399 99996 என்ற எண்ணை தொடர்பு கொண்டால் மெல்பான் வகை டெஸ்ஸர்ட் ஆர்டரின் பேரில் வழங்கப்படும் எனவும் குனியமுத்தூர் மெல்பான் மைய நிர்வாகிகள் தெரிவித்தனர்..

இந்நிகழ்ச்சியில் அமீர்,சிஹாப்,அஹ்மத்,அப்பாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## ஆவடி நரிக்குறவர் குடியிருப்பு பகுதியில் புயல் நிவாரண அத்தியாவசிய மளிகை பொருட்கள் மற்றும் காலை சிற்றுண்டிகளை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார் :

திருவள்ளூர் டிச 06 :

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, திருமுல்லைவாயல், ஆவடி மாநகராட்சி, எச்.வி.எப். சாலை நரிக்குறவர் குடியிருப்பு பகுதியில் புயல் நிவாரண அத்தியாவசிய மளிகை பொருட்கள் மற்றும் காலை சிற்றுண்டிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்.பின்னர், ஆவடி மாநகராட்சி அலுவலக வளாகத்தில் புயல் நிவாரண அத்தியாவசிய மளிகை பொருட்களை 300க்கும் மேற்பட்ட தூய்மை காவலர்களுக்கு அமைச்சர் வழங்கி,சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு பேசினார்.



திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தை தடுக்க ஆங்காங்கே இருக்கும் தண்ணீர் அகற்றப்பட்டு வருகிறது. அதேபோன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குமிடம், அவர்களுக்கு தேவையான படுக்கை, அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதி அனைத்தையும் திறம்பட செய்து, ஏறக்குறைய மாவட்டம் முழுவதும் 75 இடங்களில் தற்காலிக முகாம்களும் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று ஆவடியில் மட்டும் பத்து முகாம்கள் அமைக்கப்பட்டு, அம்முகாம்களில் தங்குவதற்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஹவுசிங் போர்டு பகுதிக்கு ரூ,27 கோடி ஒதுக்கீடு செய்து, தேங்கியுள்ள மழைநீர் அப்புறபடுத்திய பின்பு டெண்டர் விடப்பட்டு ஒரு வார காலத்துக்குள் பணிகள் துவங்கப்படும். மாவட்டம் முழுவதும் இருக்கின்ற வடிகால்களை சீர் செய்து பணிகளை சிறப்பான முறையில் செய்து முடித்தார்கள். இன்று நிவாரணம் மற்றும் உணவு மட்டுமே ஆயிரம் நபர்களுக்கு வழங்கப்பட்டது, நரிக்குறவர், தூய்மை பணியாளர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, அவங்களுக்கு தேவையான மருத்துவ வசதி, சிறப்பு மருவத்துவ முகாம், ஏற்கனவே 15 இடத்துல சிறப்பு மருவத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு சில இடங்களில் தண்ணி தேங்கி நிக்கிறது அதையும் இப்பொழுது இராட்சத இயந்திரங்கள் மூலம் மழைநீரினை வெளியேற்றும் பணிகள் செய்து வருகிறோம். இன்று சுமார் 1000 நரிக்குறவர், தூய்மை பணியாளர்களுக்கு ரூ. 300 மதிப்பிலான மளிக்கை பொருட்கள், உணவுகள் வழங்கப்பட்டது. மேலும் தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு காலை, இரவு என இரு வேலையும் மாநகராட்சி சார்பாக உணவு வழங்கப்படுகிறது என அமைச்சர் கூறினார்.

இதில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப்,ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா,துணை மேயர் சூர்யகுமார், துணை ஆணையர் மாரிச்செல்வி, ஆவடி மாநகராட்சி மண்டல குழு தலைவர் அமுதா சேகர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்டபட்ட பஞ்சப்பூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் டைடல் பூங்காவில் தற்போதைய பணி முன்னேற்றம் நிலவரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருச்சி., டிச. 6–

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (18.02.2025) அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்டபட்ட பஞ்சப்பூரில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் ரூபாய் 403 கோடி மதிப்பீட்டில் 5.58 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரை தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.




2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது. அதனைத்தொடர்ந்து தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சு+ழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையிலும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி சு+ழல் அமைப்பை பரவலாக்கும் முயற்சியின் அடுத்தகட்டமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பஞ்சப்பூரில், ரூ.403 கோடி மதிப்பீட்டில் 5.58 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் ஐவுஇ ஐவுநளுஇ டீறிமுஹஇ ளுவயசவரிள போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே. சரவணன்,இ.ஆ,ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். மேலும், மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அப்பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், மேற்பார்வை பெரியாளர் (தமிழ்நாடு மின்சார வாரியம்) பெரி.பி. சே.மேரிமேக்டலின் பிரின்ஸி, உதவி செயற்பெரியாளர் (டைடல் பூங்கா) திரு. செ.செந்தில்ராஜ், மாநகராட்சி செயற்பெரியாளர் திரு.பாலசுப்பிர மணியன், உதவி செயற்பெரியாளர் திரு.வேல்முருகன், டைடல் பூங்கா கட்டுமானப் பெரியாளர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூரில் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றாத திமுக அரசைக் கண்டித்து அரசு ஊழியர்கள் சங்கத்தினர் சாலை மறியல்




திருவள்ளூர் டிச 06 :

தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றாத தமிழக அரசை கண்டித்து திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக நுழைவாயில் அருகே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்திட வேண்டும்.

அரசு துறைகளில் காலியாக உள்ள லட்சக்கணக்கான பணியிடங்களை நிரப்ப வேண்டும். சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், எம். ஆர்.பி., செவிலியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதியம் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு சட்டப்பூர்வ ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், அரசு ஊழியர்கள் பணி சுமையை குறைக்க அலுவலக பணி நேரத்துக்கு பின்பும் விடுமுறை தினங்களிலும் ஆய்வு கூட்டம் நடத்துவதை கைவிட வேண்டும், அரசு ஊழியர்களுக்கான மருத்துவ காப்பீடு திட்டத்தை தமிழக அரசு ஏற்று நடத்த வேண்டும். பெண் அரசு ஊழியர்களுக்கு அரசு சிறப்பு சலுகைகளை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பி சென்னை திருப்பதி தேசிய நெடுஞ் சாலை கலெக்டர் அலுவலகம் எதிரே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோரிக்கைகளை நிறைவேற்றா விட்டால் வருகிற 2026 ஜனவரி மாதம் முதல் வாரம் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்ளப் போவதாகவும் அரசு ஊழியர்கள் சங்கத்தினர் எச்சரித்தனர். அதனைத் தொடர்ந்து அனுமதியின்றி சாலை மறியலில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர் 75க்கும் மேற்பட்டவர்களை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். விடியா அரசை கண்டித்து அரசு ஊழியர்கள் சாலை மறியல் ஈடுபட்ட சம்பவம் அரங்கேறியது.

## காவல்துறை பறிமுதல் செய்த வாகனங்கள் டிச.22, 23ல் பொது ஏலம்

சென்னை: டிச.6–

காவல்துறை பறிமுதல் செய்த வாகனங்கள் டிச.22, 23ல் பொது ஏலம் விடப்படுகிறது. சென்னை காவல்துறை கூடுதல் இயக்குநர், அவர்களின் உத்தரவின் படி காவல் துறை தலைவர், அவர்களின் தலைமையில் தமிழகம் முழுவதும் உள்ள போதை பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலகங்களில் போதை பொருள் கடத்தலில் கைப்பற்றப்பட்ட வழக்குளில் பறிமுதல் செய்யப்பட்ட 30 இரண்டு சக்கர வாகனம், 2 மூன்று சக்கர வாகனம் 30 நான்கு சக்கர வாகனம் 4 லாரிகள் மற்றும் 6 படகுகள் மொத்தம் 72 வாகனங்கள், அவற்றில் 48 வாகனங்கள் வரும் 22ம் தேதி 11.00 மணிக்கு மதுரையிலும் மற்றும் 24 வாகனங்கள் 23ம் தேதி 11.00 மணிக்கு திருச்சியிலும் பொது ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏலம் எடுக்க விரும்புவோர் 07.12.2025 ம் தேதி முதல் 21.12.2025 ஆம் தேதி வரை திருச்சி (9498158708), கன்னியாகுமரி (9444580750), தேனி (9788924045), திண்டுகல் (7904065255), சிவகங்கை (8300063466), மதுரை (9585511010), நாகப்பட்டினம் (7904548453), கோயம்பத்தூர் (9498173282), சேலம் (7200008025), மற்றும் விழுப்புரம் (9894378470) ஆகிய போதை பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலகங்களில் நேரடியாக சென்று பார்வையிட்டு கொள்ளலாம்.

ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் நுழைவு கட்டணமாக ரூபாய்.1000/ செலுத்தி முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். ஏலம் எடுத்தவர்கள் உடனடியாக ஏலத்தொகையை ரொக்கமாக செலுத்திவிட்டு இரண்டு நாட்களுக்குள் அதற்குண்டான நிஷிஜி தொகையை அவர்களுடைய GST கணக்கில் செலுத்திவிட்டு அதன் நகலை சம்மந்தப்பட்ட ழிமிஙி அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும். அதன் பின்னர் வாகனத்தின் விற்பணை ஆணை வழங்கப்படும். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் தவறாமல் அவர்களின் ஆதார் அட்டை நகலை ஏலத்திற்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழக அரசியலில் பரபரப்பு

## தவெக தலைவர் விஜய் உடன் காங்கிரஸ் நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி சந்திப்பு:

“சென்னை, டிச. 6–

தமிழகத்தில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் முதல் முறையாக களம் காண இருக்கிறது. விக்கிரவாண்டியில் நடந்த தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டில் விஜய் பேசும்போதே, \"எங்களுடன் கூட்டணி அமைக்கும் கட்சிகளுக்கு ஆட்சியிலும் பங்குதரப்படும்\" என்று அறிவித்தார். அதாவது, அமைச்சரவையிலும் இடம் வழங்கப்படும் என்பதுதான் அது. விஜய்யின் இந்த அறிவிப்பு, தமிழக அரசியலுக்கு புதிது. தமிழ்நாட்டில் இதுவரை ஆண்ட கட்சிகளான காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. ஆகியவை கூட்டணி கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்ததே இல்லை. தற்போது, தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி தி.மு.க. கூட்டணியிலேயே தொடர்கிறது. இந்த நிலையில், விஜய்யுடன் கூட்டணி அமைப்பது குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி சமீபத்தில் பேசியதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இதை மறுத்தார். இந்த பரபரப்புக்கு மத்தியில், தமிழக சட்டசபை தேர்தலில் கூட்டணி குறித்து பேச அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைமை 5 பேர் கொண்ட குழுவை அமைத்தது. இந்த குழுவினரும் கடந்த சில தினங்களுக்கு



முன்பு தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினார்கள். இந்த சந்திப்புக்கு பிறகு பேட்டியளித்த செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சி தி.மு.க. கூட்டணியில் தொடர்கிறது என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில், ராகுல்காந்தியின் நெருக்கம் காட்டும் முக்கிய நிர்வாகியும், தேர்தல் வியூக வகுப்பாளருமான பிரவீன் சக்கரவர்த்தி, தவெக தலைவர் விஜய்யை சந்தித்து பேசியிருக்கிறார். இதை ஒப்புக்கொண்ட அவர், அரசியல் நிலவரம் குறித்து பேசியதாகவும், மேற்கொண்டு எதையும் இப்போதைக்கு கூற முடியாது என்றும் கூறிவிட்டார். இது தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே, விஜய்யுடன் ராகுல்காந்தி பேசியதாக தகவல் வெளியான நிலையில், இப்போது மற்றொரு நிர்வாகியான பிரவீன் சக்கரவர்த்தியும் சந்தித்து பேசியிருப்பது, சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி அணி மாறுகிறதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.”,

## குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிப்பு!

தென்காசி: டிச.6–

குற்றாலம் மெயின் அருவியில் இன்று சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் குளிப்பதற்காக சுற்றுலா பயணிகளின் வருகை கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில், மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குற்றாலம் மெயின் அருவியில் இன்று சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருக்கும் போது

ரத்ததானம்.... இறந்த பின்

கண்தானம் செய்வீர்...

# சாலைகளில் பிச்சை எடுக்க குழந்தைகளை பயன்படுத்துவதை தடுக்க வேண்டும்: அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை: டிச.6–

சாலைகளில் பிச்சை எடுக்க குழந்தைகளை பயன்படுத்துவதை தடுக்க உரிய நடைமுறைகளை வகுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

சென்னை சாலைகளில் குழந்தைகளுடன் பிச்சை எடுக்கும் தாய்மார்கள், உண்மையிலேயே அந்த குழந்தைகளின் தாய் தானா என்பதை கண்டறிய விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி, சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் தமிழ்வேந்தன் உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், சாலை சிக்னல்களில் குழந்தைகளுடன் பிச்சை எடுக்கும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எந்த உருவ ஒற்றுமையும் இல்லை. பிச்சை எடுக்க பயன்படுத்தும் குழந்தைகள் எந்நேரமும் தூங்கிக் கொண்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

வெயில், வாகன சத்தத்துக்கு கூட அந்தக் குழந்தைகள் கண்முழிப்பது இல்லை. அதனால் குழந்தைகளுக்கு தூக்க மாத்திரை கொடுக்கப்பட்டிருக்கிறதா?, வேறு மருந்துகள் அல்லது ஆல்கஹால் கொடுக்கப்பட்டிருக்கிறதா என கண்டறிய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிச்சை எடுக்கும் பெண்கள் பெரும்பாலும் தமிழில் பேசுவதில்லை. குழந்தைகளை வேறு இடங்களில் இருந்து கடத்தி வந்து பிச்சை எடுக்க பயன்படுத்தப்படுகிறதா? பின்னணியில் செயல்படுவோர் யார் என்பதை கண்டறிய விசாரணை நடத்தப்பட வேண்டும். இதுசம்பந்தமாக அளித்த மனுவை பரிசீலித்து, குழந்தைகளை மீட்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, இதுபோன்ற செயல்களை தடுக்க உரிய நடைமுறைகளை வகுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு அறிவுறுத்தியது.

மேலும், மனுவுக்கு பதிலளிக்கும்படி, அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை டிசம்பர் 11ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளனர்.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: டிச.7ல் இந்து முன்னணி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்!



திருப்பூர்: டிச.6–

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற அனுமதி மறுத்ததைக் கண்டித்து வரும் 7ம் தேதி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக இந்து முன்னணி அறிவித்துள்ளது.

இந்து முன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் திருப்பூரில் இன்று செய்தியாளரிகளிடம் பேசியதாவது: கடந்த 2 நாட்களாக தமிழக அரசு மக்களின் பக்தியை அவமதித்து வருவதைக் கண்டிக்கிறோம். உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் அதனை சிறிதுகூட மதிக்காமல் அரசியல் சாசனத்துக்கு எதிராக காவல்துறை செயல்பட்டு வருகிறது. திமுகவின் இந்து விரோத நடவடிக்கைகளை திசை திருப்ப பல்வேறு தில்லு, முல்லு வேலைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

காவல்துறை நீதிமன்ற உத்தரவை அனுமதிக்காமல் முட்டுக்கட்டை போட்டு நடந்து கொண்டது கடமை தவறிய நடவடிக்கை. 1996ம் ஆண்டு உயர் நீதிமன்றம் திருப்பரங்குன்றம் மலைமீது கோயில் நிர்வாகம் தீபம் ஏற்ற தீர்ப்பு வழங்கியது. 2014ம் ஆண்டு நீதிமன்றம் மலை மீது எங்கும் தீபம் ஏற்றலாம். அதனை கோயில் நிர்வாகம் செய்யலாம் என்று கூறியது. 2015ம் ஆண்டு தர்கா நிர்வாகம் மலையில் தீபம் ஏற்ற ஆட்சேபனை இல்லை என நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்தாத கோயில் நிர்வாகம் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையை எதிர்த்து தான் இப்போது வழக்கு நடந்து அதில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

நீதிமன்ற விஷயத்தில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தவறான தகவலைச் சொல்கிறார். மற்றமதபண்டிகைகளுக்கு வாழ்த்துச் சொல்லும் திமுக அரசு, விநாயகர் சதுர்த்திக்கு, தீபாவளிக்கு வாழ்த்து சொல்வதில்லை. மதச்சார்பின்மை என்று சொல்லிக் கொண்டு திமுக வேடம் போடுகிறது.

நாங்கள் மதக் கலவரத்தை தூண்டவில்லை. அங்கு எழுந்த சலசலப்புக்கும் போலீஸார் தான் காரணம். தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு மிக மோசமாக உள்ளது. அதனை மறைக்கவே, திருப்பரங்குன்றத்தை திமுக அரசு கையில் எடுத்துள்ளது.

திமுகவின் மக்கள் விரோத, சட்டவிரோத செயல்பாட்டை கண்டித்தும் திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வலியுறுத்தியும் வரும் 7ம் தேதி பக்தர்களை இணைந்து மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம், அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகிறது. மதுரையின் வளர்ச்சியை யாரும் தடுக்கவில்லை. பல கோயில்களில் ஊழல்கள் நடந்துள்ளது. அதன்மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். இதில் மாநில செயலாளர் கிஷோர்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

# மேகேதாட்டு விவகாரம்: மத்திய அரசை கண்டித்து தஞ்சாவூரில் விவசாயிகள் ரயில் மறியல்: 100 பேர் கைது




தஞ்சாவூர்: டிச.6–

மேகேதாட்டு அணை விவகாரம் தொடர்பாக மத்திய அரசையும், உச்ச நீதிமன்றத்தையும், கர்நாடக அரசையும் கண்டித்து தஞ்சாவூரில் தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தின் சார்பில் இன்று காலை ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 100 விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். தஞ்சாவூர் ரயில் நிலையத்துக்கு திருச்சியில் இருந்து சென்னை செல்லும் சோழன் விரைவு ரயில் வந்தபோது, அந்த ரயிலை தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் பழனியப்பன் தலைமையில் விவசாயிகள் மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது மேகேதாட்டு அணையை கர்நாடகா அரசு கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கையை காவிரி மேலாண்மை ஆணையத்தில் தாக்கல் செய்யலாம் என அண்மையில் உச்ச நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருந்தது.

இந்த உத்தரவை திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே அணை கட்டக்கூடாது என்பதை வலியுறுத்தியும், மத்திய அரசு ராசி மணலில் அணைகட்ட உரிய அனுமதியை வழங்க வேண்டும் எனவும், நெல்லின் ஈரப்பதம் 22 சதவீதம் அளவுக்கு நிரந்தர கொள்முதல் உத்தரவை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தி போராட்டத்தில் விவ சாயிகள் முழக்கங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளை போலீஸார் கைது செய்தனர். இந்த போராட்டத்தின் காரணமாக திருச்சி சென்னை சோழன் விரைவு ரயில் ஐந்து நிமிடம் கால தாமதமாக புறப்பட்டுச் சென்றது.

## அதிக குளிரால் முதியோருக்கு முகவாதம் ஏற்பட வாய்ப்பு: அரசு மருத்துவர் எச்சரிக்கை

சென்னை: டிச.6–

அதிக குளிர் காரணமாக முதியோருக்கு ‘முக வாதம்’ ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அரசு மருத்துவர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து சிவகங்கை அரசு பொது நல மருத்துவர் அ.ப.பரூக் அப்துல்லா கூறியதாவது: முகத்துக்கு உணர்வு அளிக்கும் நரம்பில் ஏற்படும் அழுத்தம், அழற்சி, வைரஸ் தொற்று ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைதான் முக வாதம் எனப்படுகிறது.

எனவே குளிர்ந்த தரையில், பாய், தலையணை உள்ளிட்ட விரிப்பு இல்லாமல் படுப்பதையும், ஒரு பக்க கன்னத்தை நேரடியாக குளிர்ந்த தரையில் வைத்துப் படுப்பதையும் முதியவர்கள் தவிர்க்க வேண்டும்.

நேரடியாக முகத்தை தரையில் வைத்து படுப்பதன் வாயிலாக, முக நரம்பு அழுத்தப்பட்டு முக வாதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதேபோல் கார், பேருந்து, ரயில் பயணங்களில் அதிக நேரம் குளிர்ந்த காற்று காது, கன்னத்தில் படுமாறு பயணித்தாலும், முகவாதத்தை ஏற்படுத்தும்.

‘ஏசி’ பயன்பாடாக இருந்தாலும் நேரடியாக குளிர்ந்த காற்று முகத்தில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.இப்பாதிப்பில் கண்கள் திறந்தே இருக்கும் என்பதால், வறண்டு விடாமல் இருக்க சொட்டு மருந்து பயன்படுத்தலாம்.

மேலும் பகலில் கண்ணாடியும், இரவில் மூடு கவசமும் அணியலாம். திரவ, திட உணவாக இல்லாமல், கரைத்த கஞ்சியாக உட்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்

## டிட்வா புயலால் கடுமையாக பாதித்த இலங்கைக்கு தமிழ்நாடு அரசு சார்பில் நிவாரணம்!!

சென்னை: டிட்வா புயலால் கடுமையாக பாதித்த இலங்கைக்கு தமிழ்நாடு அரசு சார்பில் நிவாரணம் அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு சார்பில் நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு நாளை கப்பல் மூலம் அனுப்பப்படவுள்ளது. நிவாரண பொருட்கள் கொண்டு செல்லும் கப்பலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து அனுப்பி வைக்கிறார். அரிசி, பால் பவுடர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தமிழ்நாடு அரசு சார்பில் இலங்கை அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# திருப்பரங்குன்றம் கார்த்திகை தீப வழக்கு: நீதிமன்ற அவமதிப்பு மனு டிச.9க்கு ஒத்திவைப்பு

மதுரை: டிச.6–

திருப்பரங்குன்றம் கார்த்திகை தீப வழக்கின் நீதிமன்ற அவமதிப்பு மனு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில், “நீதிமன்ற உத்தரவு முறையாக நடைமுறைப்படுத்தவில்லை. மலைக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. 200 காவல்துறையினர் எங்களை சூழந்து கொண்டனர். எங்களை நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த அனுமதிக்கவில்லை. 144 தடை உத்தரவு அமலில் இருப்பதால் அனுமதிக்க இயலாது எனக் கூறினார்கள். தமிழக அரசு நீதிமன்ற உத்தரவை முறையாக நடைமுறைப்படுத்தவில்லை.” எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசுத் தரப்பில் வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்களில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, “தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து ஆட்சியர் மற்றும் கோயில் நிர்வாகம் தரப்பில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆகவே இந்த வழக்கு டிச.9க்கு ஒத்திவைக்கப்படுகிறது. இந்த வழக்கில் டிச.3ல் பிறப்பித்த உத்தரவை ஏன் நிறைவேற்றவில்லை என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.” என உத்தரவிட்டார்.

144 தடை விவகாரம்: அதேபோல், திருப்பரங்குன்றம் பகுதியில் பிறப்பித்த 144 தடை உத்தரவை ரத்து செய்யக் கோரிய மனுவை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டுள்ளது. மதுரையைச் சேர்ந்த விக்னேஷ், உய ர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், திருப்பரங்குன்றம் பகுதியில் பிறப்பித்த 144 தடை உத்தரவை ரத்து செய்யக் கோரியிருந்தார். இந்த மனு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது.

அரசுத்தரப்பில், “தனி நீதிபதி 144 தடை உத்தரவை ரத்து செய்து நேற்று உத்தரவிட்டார்.” எனத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதிகள், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# உலக மாற்றுத் திறனாளிகள் தினவிழாவில் மாணவர்களுக்கு வட்டாட்சியர் பரிசு





வந்தவாசி, டிச 06:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் உலக மாற்றுத் திறனாளிகள் தினவிழா அம்மையப்பட்டு வட்டார வளர்ச்சி மையம் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான பகல் நேர மைய வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஜெயசீலன் தலைமை தாங்கினார். கவிஞர் பூங்குயில் சிவக்குமார், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பெ.ரேவதி, சமூக ஆர்வலர் வி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, வந்தவாசி வட்டாட்சியர் எஸ்.சம்பத்குமார் பங்கேற்று, மாற்றுத் திறனாளி குழந்தைகள் இறைவனின் குழந்தைகள். பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர வேண்டும் என்று சிறப்புரை ஆற்றினார். மேலும் சமூக பாதுகாப்பு வட்டாட்சியர் உதயகுமார் பங்கேற்று அனைத்து மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கி வாழ்த்துரை கூறினார். நிகழ்ச்சியில் கலைச்சுடர்மணி பெ.பார்த்திபன், மும்முனி ஊராட்சி பள்ளி தலைமை ஆசிரியர் டி. நாதன்வேல், பட்டதாரி ஆசிரியர்கள் ம.ரகுபாரதி, செந்தில் குமார், நல்நூலகர் ஜா.தமீம், வழக்கறிஞர் சா.ரா.மணி, ரெட் கிராஸ் சங்க உறுப்பினர்கள் ஜி.விநாயக மூர்த்தி, அ.ஷாகுல் அமீது, வட்டார வள மைய பொறுப்பாளர் கமலக்கண்ணன், ஆசிரியை வாசுகி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியில் சிறப்பாசிரியர் எச்.லத்தீப் நன்றி கூறினார். அனைத்து குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# திருவள்ளூரில் டாஸ்மாக் தொழிலாளர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் ஆர்ப்பாட்டம்




திருவள்ளூர் டிச 06 :

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் டாஸ்மாக் சார்பில் காலி மதுபான பாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் கடந்த செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் நடைமுறைப் படுத்தப் படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட் டிருந்தது.

இந்த திட்டத்தின்படி சுற்றுச் சூழல் மாசடைவதை தடுப்பதற்காக மது அருந்திவிட்டு காலி மது பாட்டில்களை பொது வெளியில் வீசுவதை தவிர்த்து அவற்றை மதுபானக் கடைகளிலேயே திரும்ப பெறும் போது மதுபாட்டில் ஒன்றுக்கு ரூ.10 கூடுதலாக செலுத்தி பாட்டில்களை பெற்று மது அருந்திவிட்டு காலி மதுபாட்டில்களை திரும்ப அதே மதுபானக் கடையில் ஒப்படைக்கும் போது ஏற்கனவே செலுத்திய ரூ.10ஐ திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து டாஸ்மாக் ஊழியர்கள் சங்கம் சார்பாக மனுதாக்கல் செய்துள்ளனர்.

அதில் டாஸ்மாக் மதுபானங்களை விற்பனை செய்வதற்காக ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் காலி எச்சில் பாட்டில்களை வாங்க வேறு வழியை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவித்திருந்ததாக கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த செப்டம்பர் மாதம் டாஸ்மாக் அனைத்துதொழிற்சங்கம் சார்பில் மாவட்ட மேலாளர் அலுவலகம் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. ஆனால் அதற்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் டாஸ்மாக் நிர்வாகம் சார்பில் எந்த ஒப்புதலும் தராமல் பணி செய்ய அறிவுறுத்தினர்.

இந்நிலையில் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே டாஸ்மாக் தொழிலாளர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் காலி மது பாட்டில் திரும்பப் பெறும் திட்டத்தை டாஸ்மாக் ஊழியர் மீது திணிப்பதை கைவிட்டு மாற்றுத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காலி பாட்டில்களை வேறு விதங்களில் திரும்பப்பெறநடவடிக்கை எடுக்க வேண்டும் என கோஷங்கள் எழுப்பி டாஸ்மாக் தொழிலாளர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் 100க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக மாநில நிர்வாகிகளை அழைத்துப் பேசி உரிய தீர்வுகாணவேண்டும் என்றும் இல்லையேல் மிகப் பெரிய போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக அரசுக்கு எதிராக டாஸ்மாக் ஊழியர்களின் செயல்பாடு இருக்கும் எனவும் எச்சரித்த னர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421